Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JUNE 10, 2024

திங்கட்கிழமை ஜூன் 10, 2024 | ஒளி: 09 கதிர்: 269 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE

அரசியலமைப்பில் உள்ள

# 13க்கு பச்சைக்கொடி

## தத்தமது வாக்குகளை அதிகரித்துக்கொள்ள முயலும் அரசியல்வாதிகளிடம் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுங்கள்

யது பாஸ்கரன்



பலவேறு தலைவர்கள் பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு வழிகளில் வெவ்வேறு பொய்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

03ஆவது திருத்தம் அமுல்படுத்தப்படுமென நாட்டின் வடக்கு, கிழக்கு, மேல் என 9 மாகாணங்களிலும் உள்ள மக்களுக்கும் இந்த வாக்குறுதியை வழங்குகிறேன். இதனை நடைமுறைப்படுத்தத் தயங்கப் போவதில்லை என்றார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 225 ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், கிளிநொச்சி, பாரதி வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை(09) இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், இப்பிரதேச மக்களின் அரசியல், மத, சமூக, கலாசார உரிமைகள் வழங்கப்படும். நாட்டின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் அரசியல் மற்றும் சிவில் உரிமைகளே உள்ளடங்கியுள்ளன. ஆனால், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இந்த அத்தியாயத்தை விரிவுபடுத்தி இதில் பொருளாதார, சமூக, மத, சுகாதார, கல்வி உரிமைகள் வழங்கப்படும்.

தொடர்ச்சி P2




## 200 ரயில் சேவைகள் இரத்து

லொக்கோமொட்டிவ் ஒப்பரேஷன் எஞ்சினியர் சங்கத்தின் சாரதிகள் கடந்த மூன்று தினங்களாக முன்னெடுத்துவரும் வேலைநிறுத்தப் போட்டத்தினால், 200க்கும் மேற்பட்ட ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என ரயில்வே துணைப் பொது மேலாளர் (போக்குவரத்து) என்.ஜே.இடிபோலகே ஞாயிற்றுக்கிழமை (9) பிற்பகல் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## பட்டத்தை பாடையில் கட்டி போராட்டம்

நிதர்ஷன் வினோத்

பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பட்டத்தைப் பாடையில் கட்டி வேலையில்லாப் பட்டதாரிகள் யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

தொடர்ச்சி P2



## குடிபோதையில் மோதித்தள்ளி தப்பி சென்ற வைத்தியர் கைது

பாறுக் ஷிஹான்

வைத்தியர் ஒருவர் செலுத்திச் சென்ற கார், மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞனை மோதித்தள்ளிவிட்டுத் தப்பிச்சென்றிருந்த நிலையில், பொலிஸாரினால் கார் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், வைத்தியரும் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம், கல்முனையில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## “ரணில் போட்டியிட மாட்டார்”

ஜனாதிபதித் தேர்தலில் தற்போதையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, போட்டியிடமாட்டார் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர், *புதிய மின்சார சட்டத்தில் மக்கள் உரிமையை ஐக்கிய மக்கள் சக்தி பாதுகாத்தது என்றார்.

தொடர்ச்சி P2






## புதுடெல்லியில் ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பு

புதுடெல்லியில் குடியரசுத்தலைவர் மாளிகையில் ஞாயிற்றுக்கிழமை (09) மாலை நடைபெற்ற பதவியேற்பு வைபவத்தில், நரேந்திர மோடி 3ஆவது முறையாகப் பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டார். இந்த வைபவத்துக்கு சார்க் நாடுகளின் தலைவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது தூதுக்குழுவுடன் புதுடெல்லிக்கு, ஞாயிற்றுக்கிழமை (09) பயணமானார். அவருக்கு அங்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.



## ‘மலமிளக்கி’யால் விழுந்த கொக்கெய்ன் உருண்டைகள்

### விழுங்கி வந்த உகண்டா தச்சர் கைது

கொக்கெய்னை உருண்டைகளாக தயாரித்து விழுங்கிய நிலையில் வந்த, உகாண்டாவைச் சேர்ந்த 31 வயதான தச்சர், சனிக்கிழமை (08) கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தொடர்பான சர்வதேச புலனாய்வுத் தகவல்கள், பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்ததையடுத்து, அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தொடர்ச்சி P2



## ஸ்ரீ.ல.சு.க. – புதிய கூட்டணி அங்குரார்ப்பணம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் புதிய கூட்டணிக் கட்சியும் இணைந்து நடத்திய முதலாவது மக்கள் பேரணி ஞாயிற்றுக்கிழமை (08) பெருந்திரளான மக்களின் பங்குபற்றுதலுடன், அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பலாந்தோட்டை நகரில் இடம்பெற்றது.

தொடர்ச்சி P2




## பஸ் விபத்தில் 13 சாரணி மாணவர்கள் காயம்

பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸொன்று வரக்காபொல பகுதியில், ஞாயிற்றுக்கிழமை (09) காலையில் விபத்துக்கு உள்ளாகியதில், 13 மாணவர்கள் மற்றும் பெற்றோர் காயமடைந்து வரக்காபொல வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## 5 ஆயிரம் ரூபாய் பண தாள்களை மிதிக்கும் நபர்



யாழ்ப்பாணத்தில் நபரொருவர், 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பணத் தாள்களை கீழே போட்டு, இரண்டு கால்களிலும் மிதிக்கும் காணொளி சமூக வலைத்தளங்களில், சில நாட்களுக்கு முன்பிருந்தே பரவி வருகிறது. ஒரு கோடிஸ்வரராக தன்னை மக்கள் மத்தியில் வெளிப்படுத்திய அவர், தன்னை ஒரு தியாகி என்றே கூறிவருகின்றார்.

தொடர்ச்சி P2

## தாலிக்கொடியை அறுத்த பெண்ணொருவர் கைது



யாழ். கன்னாதிட்டி காளிகோயில் கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்ட அடியார்களின் தாலிக்கொடி உள்ளிட்ட தங்க நகைகளைத் திருடிய பெண்ணொருவர் ஞாயிற்றுக்கிழமை (9) கைது செய்யப்பட்டார்.

கைதான பெண் வவுனியா பூந்தோட்டத்தில் வசிப்பவர் என்றும் இவர், கொழும்பு - வெல்லம்பிட்டியைச் சேர்ந்த 27 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 13க்கு பச்சைக்கொடி

இந்நாட்டில், முதலாந்தர, இரண்டாந்தர மற்றும் மூன்றாந்தர பிரஜைகள் என்ற வகைப்பாடுகள் எதுவும் இல்லை. எல்லோரும் ஒன்று போல் சமமானவர்களே. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் பர்கர்கள் உட்பட 220 இலட்சம் குடிமக்களும் முதலாம் தர பிரஜைகள் ஆவர். இதற்கான ஏற்பாடுகள் இல்லாததால், நிர்வாகத் துறையில் சட்டம் ஒழுங்கும் துறையில் ஏற்பாடுகளை மேற்கொண்டு யதார்த்தமாக நடைமுறைப்படுத்துவோம்.

13ஆவது திருத்தம் குறித்துப் பேசும் போது பல்வேறு தலைவர்கள், மேலே பார்த்துக் கொண்டு இருத்தல், கேட்காதது போல் நடந்து கொள்ளுதல், பிற தலைப்புகளைக் கொண்டு வருதல், பயப்படுதல் மற்றும் வெட்கப்படுதல் போன்ற அரசியல் சந்தர்ப்பவாதிகளாக நடந்து கொண்டாலும், தான் நேராகப் பேசும் நபர் என்றபடியால், 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவேன்.

சிங்களவர்களாக இருந்தாலும், தமிழர்களாக இருந்தாலும், பேர்கர்களாக இருந்தாலும், முஸ்லிம்களாக இருந்தாலும் ஒன்றாய் கைகோர்த்து, ஒரு தாயின் பிள்ளைகள் போல் நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றுபட வேண்டும்.

பல்வேறு அரசியல்வாதிகள் வடக்கிற்கு வந்து அரசாங்கத்தின் வளங்களைப் பகிர்ந்தளித்தாலும், பல்வேறு நன்கொடையாளர்கள் வழங்கிய உதவிகளையே நான் வழங்கி வருகிறேன்.

எதிர்க்கட்சியில் உள்ள ஏனைய கட்சிகள் பணியாற்றாது இருந்தாலும், தானும் தனது குழுவும் பணியாற்றி வருகிறேன்.

சிங்களம் மட்டுமே, தமிழ் மட்டுமே என சொல்லிக் கொண்டு தத்தமது வாக்குகளை அதிகரித்துக் கொள்ள முயலும் அரசியல்வாதிகளிடம் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுங்கள். பிள்ளைகளின் எதிர்காலத்தைக் குறித்து சிந்திக்காமல் தமது வாக்குகள் குறித்து சிந்திப்பவர்களே இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனது வாக்குகளை அதிகரித்துக் கொள்ளாமல், பிள்ளைகள் மற்றும் பாடசாலைகளுக்குப் பெறுமானத்தைக் கூட்டிக் கொள்ளும் பணியையே முன்னெடுத்து வருகிறேன். எந்த இனத்துக்குச் சொந்தமான, எந்த மதத்துக்குச் சொந்தமான பிள்ளைகளாக இருந்தாலும் எந்தவித பேதமுமின்றி அனைத்துப் பிள்ளைகளையும் ஒன்றாகக் கருதி அவர்களின் எதிர்காலத்திற்கான முதலீடாகவே இந்த பணியைச் செய்து வருகிறேன்.

அடிமட்டத்தில் இருந்து பெறப்படும் யோசனைகளின் ஊடாக வடமாகாணத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம். இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படாத வரலாற்றுச் சிறப்புமிக்க வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்திய இந்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டின் தலைவரான பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தை அபிவிருத்தி செய்து தருவேன் என உறுதியளிக்கிறேன்.

அத்துடன், இப்பிரதேசத்தில் தனியான கைத்தொழில் பேட்டைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் அமைத்துத் தரப்படும் என்றும் இந்தியாவில் உள்ள IIM மற்றும் IIT போன்ற கல்வி நிறுவனங்களின் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு எமது நாட்டிலும் இதுபோன்ற நிறுவனங்களை நிறுவி, சர்வதேச தரத்தில் அமைந்த தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ நிறுவனங்கள் நிறுவப்படும்.

இற்கு இந்தியா உள்ளிட்ட நாடுகளின் ஒத்துழைப்பைக் பெற்றுக் கொள்ளுவோம் எனவும் கூறினார்.

# 200 ரயில் சேவைகள் இரத்து

இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக நாளொன்றுக்கு சுமார் 65 ரயில் பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன, களனிவெளி மார்க்கத்தில் அதிகளவான பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் இடிபோலகே தெரிவித்தார்.

களனிவெளி மார்க்கத்தில் அதிகளவான மின் பெட்டிகள் இயங்கி வருவதால், அவ்வழியில் அதிக எண்ணிக்கையிலான பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், ஏனைய பாதைகளிலும் அதிகமான பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பவர்செட் ரயில் சாரதிகளின் பணிப்புறக்கணிப்புக்கு காரணமான மூன்றாம் தரம் இரண்டாம் தரமாகப் பதவி உயர்வு வழங்குவது தொடர்பான பிரச்சினை தற்போது தீர்க்கப்பட்டுள்ளதாகவும், இரண்டாம் தர பதவி உயர்வு தொடர்பான 11 கடிதங்கள் சாரதிகளுக்குத் திங்கட்கிழமை (10) அனுப்பி வைக்கப்படும் என்றார்.

இதுவரை 57 சாரதிகள் இரண்டாம் தரத்திற்குப் பதவி உயர்வு பெற்றுள்ளதாகவும் மேலும் 11 பேருக்கு வழங்கப்பட உள்ளதாகவும் இரண்டாம் தரத்திற்குப் பதவி உயர்வுக்காகக் காத்திருக்கும் சுமார் 10 சாரதிகள் தகுதிகளைப் பூர்த்தி செய்யாதவர்கள் எனவும் இடிபோலகே தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற சாரதிகளைப் பயன்படுத்தி வெளி மாகாணங்களிலிருந்து சுமார் 10 புகையிரத பயணங்கள் திங்கட்கிழமை (10) மேற்கொள்ளப்பட உள்ளதாகவும், தேவைப்பட்டால் புகையிரத பரிசோதகர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளதாகவும் இடிபோலகே தெரிவித்தார்.

# பட்டத்தை பாடையில் கட்டி போராட்டம்

வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்னாள் இந்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"பட்டம் வீட்டில் பட்டதாரிகள் நடு ரோட்டில்", "ஒரே ஒரு பரீட்சையில் பறந்து போனது பல பரீட்சை எழுதிப் பெற்ற பட்டம்", "வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்", "எமக்கான வாழ்க்கையை நாம் எப்போது வாழ்வது", "படிப்பிற்கும் போராட்டம் வேலைக்கும் போராடுவதா", "எல்லோருக்கும் பாரபட்சமின்றி வேலைகளை வழங்க வேண்டும்", "படித்ததக்கு கூலித் தொழிலா"? "கடைசி வரைக்கும், படித்தவர்கள் இந்த நாட்டின் சாபக்கேடுகளா?", "பல வருடக் கனவு வெறும் கனவாகவே போய்விடுமா?", "படித்தும் பரதேசிகளாகத் திரிவதா? " என கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன்

**கோரிக்கைகளை அரசாங்கம் விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்றும் இல்லையேல் தொடர்ந்து தாம் பாரிய போராட்டங்களை நடாத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர்**

அனைத்து பட்டதாரிகளுக்கும் பாரபட்சமின்றி வேலை வாய்ப்பை வழங்க வேண்டுமென வலியுறுத்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் தமது கோரிக்கைகளை அரசாங்கம் விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்றும் இல்லையேல் தொடர்ந்து தாம் பாரிய போராட்டங்களை நடாத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

# "ரணில் போட்டியிட மாட்டார்"

இலங்கை மின்சார சபையின் நிர்வாகத்தைச் சீரழித்து 12 பங்குகளாகப் பிரித்து தனியார்மயமாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவித்த அவர், இச்சட்டத்தின் மூலம் அமைச்சருக்குக் குவிக்கப்பட்ட அதிகாரங்களை எமது ஆட்சியில் குறைப்போம் என்றார்.

மன்னார் மற்றும் பூநகரி ஆகிய பகுதிகளில் நிர்மாணிக்கப்படவுள்ள அதானி நிறுவனத்தின் 'அதானி கிரீன் எனர்ஜி' காற்றாலை மின் உற்பத்தியின் ஊடாக மின்சாரத்தை 20 வருடங்களுக்குக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை இந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

தற்போதுள்ள சட்டத்திலே மீறல் இடம்பெற்று வருகிறது. அதானி நிறுவனம் இந்தியாவில் 32.5 மற்றும் 3.26 அமெரிக்க டொலருக்கு வழங்கும் போது இலங்கையில் 32.8 டொலருக்கு வழங்குகிறது. இது பாரிய உரிமை மீறலாகும் என்றார். .

அதானியிடம் இருந்து 32.8 அமெரிக்க டொலருக்கு மின்சாரத்தைக் கொள்வனவு செய்கின்றனர். இது மக்கள் உரிமையை மீறும் செயலாகும். இந்தத் திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தில், ஒரு கிலோவோட் மணித்தியாலத்திற்கு 8.26 அமெரிக்க டொலர் (அந்நிய செலாவணிக்கு அமைவாக இலங்கை ரூபாவில் செலுத்தும் நிபந்தனையின் பிரகாரம்) என்ற இறுதிக் கட்டணத்தில் கொள்வனவு செய்ய ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த புதிய மின்சார சட்டத்தின் ஊடாக ஊழல் மேலும் அதிகரிக்கும் என்றார்..

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டார். அது தெளிவாகத் தெரிகிறது. இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியில் ஆட்சியில் மின்சார சட்டமூலத்தைத் திருத்தியமைத்து புதிய சட்டமொன்றை முன்வைப்போம் என்றார்.

# 'மலமிளக்கி'யால் விழுந்த கொக்கெய்ன் உருண்டைகள்

உகாண்டாவின் கம்பாலாவில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்து, அங்கிருந்து சனிக்கிழமை (08) காலை 9 மணியளவில் கட்டார் எயார்வேஸ் விமானத்தின் ஊடாக கட்டாரின் தோஹாவை வந்தடைந்து, அங்கிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு திணைக்கள அதிகாரிகளினால் அவர், கைது செய்யப்பட்டு ஸ்கேன் செய்த போது வயிற்றில் கொக்கெய்ன் உருண்டைகள் இருப்பது உறுதி செய்யப்பட்டது. அதனையடுத்து அந்த உகண்டா பிரஜையை நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான சுமார் 45 கொக்கெய்ன் உருண்டைகள், உகண்டா பிரஜையின் வயிற்றில் இருந்ததாக பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு வைத்தியசாலை வைத்தியர்கள் மலமிளக்கி வழங்கி அவற்றை வெளியேற்ற நடவடிக்கை எடுத்தனர். இந்த கொக்கெய்ன் போதைப்பொருள் உருண்டைகள் செலோ



**பிரஜைக்கு ஆங்கில மொழி அல்லது பிற நாடுகளின் மொழிகளைக் கையாள முடியாத காரணத்தினால் நீர்கொழும்பு பொது வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் பிரிவு அதிகாரிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்**

டேப்பைப் பயன்படுத்தி மிகவும் இறுக்கமாகத் தயார் செய்யப்பட்டுள்ளது.

உகாண்டா பிரஜைக்கு ஆங்கில மொழி அல்லது பிற நாடுகளின் மொழிகளைக் கையாள முடியாத காரணத்தினால் நீர்கொழும்பு பொது வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் பிரிவு அதிகாரிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

# ஶ்ரீ.ல.சு.க. – புதிய கூட்டணி அங்குரார்ப்பணம்

"நாட்டிற்கு வெற்றி - ஒன்றிணைந்து பயணிப்போம்" எனும் தொனிப்பொருளின் கீழ் பெருந்திரளான மக்களின் பங்குபற்றுதலுடன் ஆரம்பமான அம்பலாந்தோட்டை மக்கள் பேரணிக் கூட்டமானது, விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

புதிய கூட்டணி வேலைத்திட்டத்தை வலுப்படுத்தும் வகையில் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து நடாத்திய முதலாவது பொதுக்கூட்டத்தில் 20இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டமை இங்கு விசேட அம்சமாகும்.

எதிர்காலத்தில் இந்த வேலைத்திட்டத்தை மேலும் வலுப்படுத்தி, மேலும் பல பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பரந்த கூட்டணியைக் கட்டியெழுப்புவோம் என கூட்டமைப்பின் தலைவர்கள் இங்கு உறுதியளித்தனர்.

இந்நிகழ்வில், நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன,, துமிந்த திஸாநாயக்க, சுசில் பிரேமஜயந்த, நளின் பெனாண்டோ, அநுர பிரியதர்ஷன யாபா, நிமல் லான்சா, ஜோன் சேனவிரத்ன, சாமர சம்பத் தசநாயக்க, சுரேன் ராகவன், உதயகாந்த குணதிலக்க, பிரியங்கர ஜயரத்ன, ஜகத் பிரியங்கர, எஸ்.எம்.எம். முஷாரப், பிரமநாத் சி. தொலவத்த, ஜகத் புஸ்பகுமார, சுதத் மஞ்சுள உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் புதிய கூட்டணி கட்சிக்கு ஆதரவளிக்கும் மாகாண சபை உறுப்பினர்கள், மாநகர முதல்வர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், சிவில் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பெருந் திரளானோர் கலந்து கொண்டனர்.

# குடிபோதையில் மோதித்தள்ளி தப்பி சென்ற வைத்தியர் கைது

குறித்த சம்பவம் சனிக்கிழமை(8) இரவு இடம்பெற்றுள்ளதுடன், விபத்தில் பாதிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற இளைஞன் காயமடைந்த நிலையில் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேவேளை விபத்துடன் தொடர்புடைய வெள்ளை நிற கார், தப்பிச் சென்ற நிலையில் அதே வைத்தியசாலை வளாகத்தில் தரித்து நின்ற போது, கல்முனை தலைமையக போக்குவரத்து பொலிஸாரினால் மீட்கப்பட்டு, அதைச் செலுத்திச் சென்ற வைத்தியரும் கைது செய்யப்பட்டு, கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அந்த காரை செலுத்திய வைத்தியருக்கு வாகன சாரதி அனுமதிப் பத்திரம் இல்லை எனவும் குடிபோதையில் காரினை செலுத்தி வந்துள்ளதாக விபத்தை நேரில் பார்த்தவர்கள் குறிப்பிட்டனர்.

மேலும் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் இளைஞன் செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிளும் சேதமடைந்த நிலையில் கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பஸ் விபத்தில் 13 சாரணர் மாணவர்கள் காயம்

மாலபே - ராஹுல பாடசாலையைச் சேர்ந்த சாரண மாணவர்கள் ரட்டம்பே சாரண பயிற்சி முகாமுக்குச் சென்றுகொண்டிருந்த போதே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளனர். பஸ்ஸில் சாரண மாணவர்கள் 26 பேரும், பெற்றோர் 11 பேரும் பயணித்துள்ளனர்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்து, வரக்காபொல பகுதியிலுள்ள நீரோடையில் வீழ்ந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவித்த வரக்காபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# 5 ஆயிரம் ரூபாய் பண தாள்களை மிதிக்கும் நபர்

மக்களுக்குக் கோடிக்கணக்கான பணத்தைத் தானமாக வழங்குவதாகவும், சம்பவ தினத்தன்று தன்னால் பணத்தை வழங்கமுடியவில்லை என்றும் அந்த காணொளியில் தெரிவித்த அவர், அதனால்தான் இவ்வாறு செய்வதாகவும், பணம் தெய்வம் இல்லையென்றும், தனது வீட்டில் தெய்வங்களின் உருவப்படங்கள் இருந்தாலும் தான் வணங்குவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.



# தாலிக்கொடியை அறுத்த பெண்ணொருவர் கைது

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து அப்பெண்ணிடம் விசாரணை நடத்தியபோது, திருடப்பட்ட தாலிக்கொடி மற்றும் தங்க நகைகள் உள்ளிட்டவை பெண்ணின் உள்ளாடைக்குள் இருந்து எடுக்கப்பட்டுள்ளது.

இப்பெண், மேலதிக விசாரணைக்காக யாழ்ப்பாணம் பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு, பின்னர் நீதிமன்றில் முற்படுத்த



நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

# “கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது”

## றிசாட் பதியுதீன் எம்.பி. தெரிவிப்பு

ஏ.எச்.ஹஸ்பர்

பாராளுமன்றத்தை கலைத்து, தேர்தலை நடத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கே இருக்கிறது என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியுதீன், ஞாயிற்றுக்கிழமை(09) திருகோணமலை-சாஹிராக் கல்லூரிக்கு விஜயம் செய்துள்ளார்.

இதன்போது, அப்பாடசாலையில் இருந்து உயர் தரம் எழுதிய 70 மாணவிகளின் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகாதமை தொடர்பில் அதிபர், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பெற்றோர், மற்றும் மாணவர்களுடனான



கலந்துரையாடலின் பின்பே ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், சாஹிராக் கல்லூரி மாணவர்கள் எழுதிய அதே மண்டபத்தில், அதே உடை அணிந்து வேறு பாடசாலையின் முஸ்லிம் மாணவிகள் பத்து பேர் எழுதியிருந்தனர். அவர்களுக்கு பெறுபேறுகள் வெளியாகின. ஆனால், சாஹிரா கல்லூரி மாணவிகளில் மாத்திரம் கண்வைத்து இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது அநீதியாகும் என்றார்.

இந்த கல்லூரியில் மருத்துவத் துறை பொறியியல் துறைகளுக்கு அதிகமான மாணவர்கள் கடந்த பத்து வருடங்களாகத் தெரிவாகுவது வழக்கம். எனவே ?பரீட்சை பெறுபேறுகள் வெளியாக வேண்டும் இல்லாது போனால் பாராளுமன்றிலும் வெளியிலும் நீதிமன்றம் சென்றும் நீதியை இம்மாணவர்களுக்கு பெற்றுக் கொடுப்போம் என்றார்.

தேசிய வேட்பாளர் தொடர்பிலும் உயர் பீட முடிவின் பிரகாரம் யாருக்கு ஆதரவு வழங்கலாம் என முடிவுகளைத் தேர்தலின் போது அவ்வப்போது கட்சி முடிவுகளை வைத்து தீர்மானங்களை எடுப்போம் எந்த தேர்தலாயினும் சரி சில மாவட்டங்களில் தனித்தும் சில இடங்களில் இணைந்தும் போட்டியிடுவோம் என்றார்.




# புலிகளின் தங்கத்தை தேடியோர் சிக்கினர்

தமிழீழ விடுதலைப் புலிகளின் பழைய முகாம் இருந்த கிளிநொச்சி, இராமநாதபுரம், அழகரியில் அந்த அமைப்பினரால் புதைக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் தங்கத்தைத் தேடி அகழ்வு நடவடிக்கைகளை முன்னெடுத்த பிரதான பொலிஸ் பரிசோதகர் உட்பட ஐவரைக் கைது செய்ததாக இராமநாதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து காணியைச் சோதனை செய்யும் இரண்டு நவீன ஸ்கேனர்கள் மற்றும் சொகுசு ஜீப் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

சந்தேகத்திற்குரிய தலைமைப் பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் தலைமையகத்தில் ‘பொலிஸுக்குச் சொல்லுங்கள்’ நடவடிக்கையின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வருவதாகவும், சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பகுதியில் உள்ள அரச பாடசாலை ஒன்றின் ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

**“ பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட தங்கம் விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான இந்த முகாமில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் சந்தேகநபர்களுக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் அகழ்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது**

பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட தங்கம் விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான இந்த முகாமில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் சந்தேகநபர்களுக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் அகழ்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எம்.பி. மீது தாக்குதல்

# 3 எம்.பிக்களிடம் விசாரணை

பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ஷ தாக்கப்பட்டமை தொடர்பில் இதுவரை பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்ற வளாகத்தில் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, பாராளுமன்ற உறுப்பினர்களான சஹன் ப்ரதீப், மதுர விதானகே மற்றும் லலித் வர்ணகுமார ஆகியோரிடமே வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

வாக்குமூலங்கள் தொடர்பில் விரைவில் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், தாக்குதலை மேற்கொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட மஹிந்தானந்த அளுத்கமகேவிடம் இதுவரை வாக்குமூலம் பெறப்படவில்லை என பொலிஸார் கூறினர்.

ஜனாதிபதி செயலக வளாகத்தில் கடந்த திங்கட்கிழமை (03) மாலை, இடம்பெற்ற கூட்டத்தின் பின்னர் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவினால் நடத்தப்பட்ட தாக்குதலில் பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ஷவின் கால் உடைந்துள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



# திட்டமிடப்பட்டிருந்தது நடக்குமா?

இலங்கையில் நல்லாட்சி முறையினை மேம்படுத்துவதன் மூலம் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தினை வெற்றிகரமானதாக மாற்ற முடியும் என்று திட்டமிடப்பட்டிருந்தது நடக்குமா?

ஜூன் 12ஆம் திகதி சர்வதேச நாணய நிதியம் (IMF) நடைமுறைத்திட்டத்தின் மூன்றாவது பணக் கொடுப்பனவிற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளது.

ஆனால், இலங்கை தனது பொருளாதார மீட்புக்கான அடிப்படை நல்லாட்சியினை முன்னேற்றுவதற்குத் தவறிவிட்டது.

சமீபத்திய வெரிட்டே நிறுவனத்தின் IMF கண்காணிப்பானின் 2024 மே மாத தரவுகளின்படி, டிசெம்பர் 2023இல் புதுப்பிக்கப்பட்ட திட்டத்தின் 25 சதவீத வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

இத்திட்டத்தில் முடிக்கப்பட வேண்டிய 63 வாக்குறுதிகளில் 32 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டும் 16 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமலும் 15 அறியப்படாமலும் உள்ளன. (தரவுகள் கிடைக்காத படியினால் உண்மைத் தன்மையினை கண்டறிய முடியவில்லை.)

நிறைவேற்றப்படாத 16 வாக்குறுதிகளை ஆராயும் பொழுது நல்லாட்சியில் தோல்வி ஏற்படும் என்ற முடிவுக்கு வந்துள்ளது. 16 வாக்குறுதிகளையும் ஆய்வு செய்யும் பொழுது அவற்றில் 7 நிதி முகாமைத்துவம், 6 நிதி வெளிப்படைத்தன்மை, 3 ஊழல் எதிர்ப்பு அளவீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

IMF திட்டத்தினால் பொருளாதார நெருக்கடியின் மூல காரணங்களாகக் கண்டறியப்பட்ட விடயங்களை இலங்கை நிறைவேற்றவில்லை. அதாவது நிதி வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழல் எதிர்ப்பு.

ஆசியாவில் முதன்முதலாக நடாத்தப்பட்ட IMF தலைமையில் நல்லாட்சி கண்டறியும் மதிப்பீட்டு அறிக்கை இலங்கையில் செய்யப்பட்டதென்று 2023ஆம் ஆண்டு செப்டெம்பரில் வெளியிடப்பட்டது.

இதேபோல், இலங்கை சிவில் சமூக அமைப்பு தனியாக மேற்கொண்ட நல்லாட்சி கண்டறியும் மதிப்பீடு IMF இனால் மதிப்பிடப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையுடன் பெரிதும் ஒத்துப்போகின்றது. இந்த 17ஆவது IMF திட்டம் ஊழல் மற்றும் முறைகேடான ஆட்சி ஆகிய மூல காரணங்களைக் கையாளுவதன் மூலம் இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளைச் சிறப்பான முறையில் தீர்க்குமென்ற நம்பிக்கை இருந்தது. எவ்வாறாயினும், நல்லாட்சி வாக்குறுதிகளுக்கு IMF சரிவர முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் அவை திரும்ப திரும்ப புதுப்பிக்கப்படுகின்றன.

IMF அதிக முக்கியத்துவம் கொடுத்த நிலையான நிதி நடவடிக்கைகள் முந்தைய 16 IMF திட்டங்களிலும் இருந்தவையாகும். தற்போதைய திட்டத்தின் தனித்தன்மை யாதெனில் வெளிப்படைத் தன்மை மற்றும் ஊழல் எதிர்ப்பு என்பவற்றினை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் இலங்கை பொருளாதார மீட்சியின் அத்திவாரமாக மாறாவிட்டால் இது கடந்த காலவட்டத்தினை வளர்க்கும் ஒரு தவறவிட்ட வாய்ப்பாகும்.




தொ: 0754083227

புற்றுநோய் வைத்தியசாலைக்கு வரும்

# பேருந்து மீது கல்வீச்சு: ஏழு பேர் கைது

ரஸீன் ரஸ்மின்

சிலாபம் வீதிக்குச் சொந்தமான இ.போ.ச பேருந்து ஒன்றின் மீது கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொண்டதாக சந்தேகிக்கப்படும் தனியார் பேருந்து சாரதி மற்றும் நடத்துநர் உட்பட ஏழு பேர் ஆனமடுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பத்துளுஓயா, கிரியங்கள்ளிய, பங்கதெனிய மற்றும் வென்னப்புவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 25 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

புத்தளம்- ஆனமடுவ பகுதியிலிருந்து மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்குச் செல்லும் இ.போ.ச பேருந்து மீதே இவ்வாறு கல்வீச்சு தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி இ.போ.ச.வின் சிலாபம் வீதிக்குச் சொந்தமான குறித்த பேருந்து சில வருடங்களுக்கு முன்பிருந்து புத்தளம் -ஆனமடுவ நகரிலிருந்து மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை வரை தொடர்ச்சியாக சேவையை மேற்கொண்டு வருகின்றது. இதனால், புத்தளத்தில் இருந்து நாளாந்தம் பெருமளவிலான மக்கள் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் தமது மருத்துவ தேவைகளை எவ்விதமான சிரமங்களுமின்றி நிறைவேற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# “வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச நியமனங்களை வழங்குங்கள்”

**திருமலை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம்**




ஏ.எச்.ஹஸ்பர்

பட்டதாரிகளுக்கான நியமனங்களை அரச துறையில் வழங்குங்கள் என திருகோணமலை வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

திருகோணமலை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் ஒன்றியத்தின் ஊடக சந்திப்பு கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்றது இதன் போதே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

மேலும் தெரிவித்துள்ளதாவது,

“எங்களது வேலையில்லா பிரச்சினையை அதிமேதகு ஜனாதிபதி செவிமடுக்க வேண்டும். இது தொடர்பில் பாராளுமன்றத்தில் பேசுவதற்காக ஊர் பாராளுமன்ற உறுப்பினர்களையும் நாங்கள் நாடி உள்ளோம். இந்த அரசாங்கம் மிக விரைவில் எங்களது வேலையில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்” என்றனர்.

இந்தப் பிரச்சினையை சரியான முறையில் தீர்க்கா விடின் வீதிக்கு இறங்கிப் போராடுவோம். 900-க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் எந்தவிதமான வேலையும் இல்லாமல் வீதிகளிலும் ஏனைய இடங்களிலும் இருக்கின்றார்கள். வயது வந்து 35 கழிந்து விட்டது எங்களுக்கு சரியான வேலையைப் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

35 வயதுக்குப் பிறகு நிறுவனங்களிலும் உள்ளீர்ப்பு செய்வதற்கு மிகவும் கடினமாகும் உள்வாரி வெளிவாரி வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் என எவ்வித பாகுபாடும் இன்றி எங்களுக்கு வேலை வாய்ப்பினை பெற்று தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்

பெண்ணுரிமை பெண் சமூகம் பெண்களுக்கான பாதுகாப்பு சகலதையும் வழங்கக்கூடிய ஒரு நாடு அப்படியாக இருந்தும் எங்களுக்குக் கிடைக்கப்பெறுகின்ற கால அவகாசம் மிகவும் அதிகமாக இருக்கின்றது என்றனர்.

உரிய வயதில் உரிய வேலை வாய்ப்புகளைத் தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றனர்.


# கம்பஹா மகாநகர சபை

## 2024 ஆம் ஆண்டிற்கான Redy Mix க்கான விலைமனு கோரல் அழைக்கப்படுகின்றன

2024 ஆம் ஆண்டில், கிராமப்புற வீதிகளை விரிவுபடுத்துவதற்காக, மாகாண சபை மற்றும் சபையின் நிதியில் மேற்கொள்வதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற வீதிகளுக்காக Redy Mix வாங்குவதற்கு பொருத்தமான நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான விலைமனு கோரல் அழைக்கப்படுகின்றன

- அதற்கான ஏலம் 2024.06.10 ஆம் திகதி முதல் 2024.06.24 ஆம் திகதி வரை அரசு வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை விலைமனுகோரல் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். (இது தொடர்பான அட்டவணையை கம்பஹா மாநகரசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.)
- விலைமனுக்கள் 02 பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் மேலும் அசல் மற்றும் நகல் என குறிக்கப்பட்ட 02 கடித உறைகளில் இணைக்கப்பட வேண்டும் மற்றும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், “2024 ஆம் ஆண்டிற்கான Redy Mix க்கான விலைமனு கோரல் அழைக்கப்படுகின்றன - 2024” என குறிப்பிடப்பட வேண்டும். அந்த இரண்டு உறைகளையும் ஒரே உறையில் இட்டு, அந்த உறையில் “2024 ஆம் ஆண்டிற்கான Redy Mix க்கான விலைமனு கோரல் அழைக்கப்படுகின்றன - 2024” என குறிப்பிடப்பட்டு மாநகர ஆணையாளர், அதிகார செயல்பாடுகள் அமுலாக்கள் அதிகாரி, கம்பஹா மகா நகரசபை, மெரிபிசோ மாவத்தை, கம்பஹா என்ற முகவரிக்கு 2024.06.24 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது கையால் கொண்டு வந்து எங்கள் நிறுவனத்தின் டெண்டர் பெட்டியில் போடலாம்.
- திரும்பப்பெறக்கூடிய டெண்டர் பாதுகாப்புத் தொகை ரூ.25,000.00.
- அந்த தொகையை நிறுவனத்திடம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்படும் ரசீதின் நகலை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.
- இந்த கொள்முதல் குறித்த இறுதி முடிவு மாநகராட்சி ஆணையரிடம் உள்ளது.

**மாநகர ஆணையாளர்,**
**அதிகார செயல்பாடுகள் அமுலாக்கள் அதிகாரி,**
**கம்பஹா மகா நகரசபை,**
**கம்பஹா.**

மேலதிக விபரங்களுக்கு - 033 4942302 , 033 2222275

# மொத்த நிவாரணத்தையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்

இந்நாட்டில் பெரும்பான்மையான மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர் என்பது மிகத் தெளிவானது. கொடிய கொரோனா வைரஸ் மற்றும் நாட்டை உருவாக்கிய மக்கள் எடுத்த பிடிவாதமான மற்றும் முட்டாள்தனமான முடிவுகளால், நாட்டின் பொருளாதாரம் கடுமையான நெருக்கடியில் உள்ளது. அந்த நெருக்கடியின் தாக்கம் காற்றின் வேகத்துடன் மக்கள் வாழ்வில் உணரத் தொடங்கியது. பொருட்களின் விலை கிடுகிடுவென உயர்ந்தது.

தற்போதுள்ள வேலை வாய்ப்புகளை இழப்பது, கூடுதல் வருமான ஆதாரங்களை மூடுவது மற்றும் புதிய வருமான ஆதாரங்களைத் திறக்காதது போன்ற காரணங்களால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்தின் வருமான ஆதாரங்கள் துண்டிக்கப்பட்ட போது, மக்கள் மீது வரி விதிப்பதே தீர்வாக அமைந்தது. மின்சாரக் கட்டணம், தண்ணீர் கட்டணம் உயர்வு. ஒரு சோதனை.

சட்டம் என்பது மக்களை ஒடுக்கும் ஒரு அடக்குமுறை கருவி அல்ல. ஆனால், மின்சார சபையின் ஊழியர்கள் சிலரின் நடத்தையை நியாயப்படுத்த முடியாது. மின்சார சபையின் சில ஊழியர்கள் மின்சாரக் கட்டணம் செலுத்தாததை மனிதாபிமானத்துடனும் அனுதாபத்துடனும் பார்க்கும் அளவுக்கு நாகரீகம் இல்லை. குறைந்த தொகைக்குக் கூட மின்சாரத்தைத் துண்டித்தனர். மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் பாதிக்கப்பட்ட மக்கள், இறுதியில் மின்சார விநியோகத்தை மீட்டெடுக்கக் கட்டுப்படியாகாத கூடுதல் செலவைச் சுமக்க வேண்டியிருந்தது. இந்தச் சூழலில்தான் ஜூலை மாதம் முதல் மின்கட்டண விலை குறைப்பு குறித்து மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் விடுத்த அறிவிப்பு பெரும்பான்மையான மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாக அமைந்துள்ளது.

0 முதல் 38 இலட்சம் வாடிக்கையாளர்களுக்கு அலகு ஒன்றுக்கு அறவிடப்படும் 8 ரூபாவை 6 ரூபாவாகவும், 30 முதல் 60 அலகுகளுக்கு இடைப்பட்ட 20 இலட்சம் பேரிடம் இருந்து ஓர் அலகுக்கு அறவிடப்படும் கட்டணத்தை 20-11 ரூபாவாகவும் குறைக்க முன்மொழியப்பட்டுள்ளது. 60 முதல் 90 அலகுகளுக்கு இடைப்பட்ட 15 இலட்சம் பேரிடம் இருந்து அலகு ஒன்றுக்கு 30 ரூபாய் வசூலிக்கப்படும் கட்டணத்தை 18 ரூபாவாக குறைக்கவும், 120 அலகுகளைப் பயன்படுத்தும் நபர்களிடம் இருந்து அலகு ஒன்றுக்கு 50 ரூபாயாக வசூலிக்கப்படும் கட்டணத்தை 30 ரூபாயாகவும் குறைக்க அமைச்சர் பரிந்துரை செய்துள்ளார்.

அதிகரித்த தொகைக்கு ஏற்றவாறு குறைப்பை எதிர்பார்க்க முடியாது. முடியாது என்றே அரசாங்கம் சொல்லும், ஆனால் மின் கட்டண உயர்வு சில பொருட்களின் விலையையும் பாதித்தது. இதற்குக் காரணம், சில உணவு வகைகளின் உற்பத்திக்கும், பொருட்களின் உற்பத்திக்கும் நேரடியாக மின்சாரம் தேவைப்படுகிறது. அப்படியானால், மின் கட்டணம் குறைவதால், அந்த பொருட்கள் மற்றும் பொருட்களின் விலை குறைய வேண்டும். மொத்த நிவாரணம் கிடைக்கும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். என்பதை அனைவரும் மனதில் கொள்ள வேண்டும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

வேண்டப்பட்டவர்களுக்கு வேண்டப்படும் உண்மைகளை மறைக்கக்கூடாது. இன்றைய உலகத்தில் தமக்குப் பிடித்தவர்களுக்காக நீதிக்குப் புறம்பானவற்றைத் தாராளமாகச் செய்துவருகின்றார்கள்.

உண்மையை மறைப்பது எதிர்வினையை உண்டாக்கும். ஆனால், சத்தியத்திற்குச் சாவில்லை. மறைந்து நின்று அதன் வலிமையைக் காட்டும்.

உலகம் பெற்றுவரும் அனுகூலங்களை, மனிதன் மறைமுகமாகத் திருடுகின்றான். பல தடவைகள் கஷ்டப்பட்டு இயற்கை வளத்தைப் பெருக்காமல், மிகச் சுலபமாக அதில் கைவைத்து சுய லாபங்களுக்காக அழிக்க முற்படுகின்றான்.

இது எதிர்கால வாரிசுகளுக்குச் செய்யும் துரோகமுமாகும். நீர் நிலைகளில் வீடு கட்டுதல், மகாபாவம். இது நீர்வளம் பெருகுவதைத் தடுக்கும் செயலாகும்.

அடாத செயல்களை அழிப்பது தவறானது எனும் கருத்தை உதறிச் செயல்படுவது சுயநலத்தின் கோர்வையாக வளர்ந்துவிட்டது.

உண்மை நிலைகளை மறந்து கிடைப்பததைச் சுருட்டுவதே பெரும் இலாபம் எனக் கருதும் நிலை உருவாகிவிட்டது. அறம் என்பது உண்மையின் வடிவத்தில் ஒன்று. அறவழியே நிரந்த அமைதி.

- பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்



### கடலரிப்பினால் வாழ்வாதாரம் பாதிப்பு

கற்பிட்டி - நுரைச்சோலை கரையோரப் பகுதியின் கொய்யாவாடி, இலந்தையடி மற்றும் ஆலங்குடா உள்ளிட்ட பிரதேசங்கள் தொடர்ச்சியாக கடல் அரிப்புக்குள்ளாகி வருகின்றன.

இந்தக் கரையோரப்பகுதியில் சுமார் 200 இற்கும் அதிகமான மீனவ குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றதுடன், கடலரிப்பினால் வாழ்வாதாரம் முழுமையாக பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், கடலரிப்பை தடுப்பதற்காக பாரிய கற்கல் போடப்பட்டுள்ள போதிலும் கடலைப்பின் தீவிரம் இதுவரையிலும் குறையவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுவரை சுமார் 400 மீற்றர் வரை கடல் அரிப்புக்கு உள்ளாகியுள்ளதாக அந்தப் பகுதியில் உள்ள மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலையில், கடலரிப்பினால் தற்போது தமது குடியிருப்புகளும், மீன்வாடிகளும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக மக்கள் கவலைத் தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

- ரஸீன் ரஸ்மின்

# ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியா

லக்ஸ்மன்

ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாக, ஐ.நா. மனித உரிமைகள் சபையில், இந்தியா தனியாக ஒரு தீர்மானத்தை தாக்கல் செய்ய வேண்டும் என கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்திருந்தாலும், அதனை இதுவரையில் இந்தியா செய்யவில்லை. கொண்டுவரப்படுகின்ற தீர்மானங்களின் போது, நடுநிலை வகிப்பதும் பேசாது இருப்பதுமே நடைபெற்றிருக்கின்றன.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள், இனப் படுகொலை ஆகியவை குறித்து சுதந்திரமான, நம்பகத் தன்மை வாய்ந்த, சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் ஈழத் தமிழர்கள் தங்களுக்குத் தேவையான அரசியல் தீர்வை, அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வண்ணம் ஐ.நா. மேற்பார்வையில் ஏற்கெனவே சில நாடுகளில் நடத்தியதைப் போல, "பொது வாக்கெடுப்பு' நடத்தப்பட வேண்டுமென்றும் தீர்மானத்தை இந்திய அரசு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வந்து நிறைவேற்றுவதே ஈழத் தமிழர்களுக்கும், உலகெங்கிலும் வாழும் தமிழர்களுக்கும், தாய்த் தமிழகத்திலே வாழும் தமிழர்களுக்கும், தமிழ் அமைப்புகளுக்கும் நிறைவளிக்கக் கூடிய காரியமாக அமையும்" என்றே ஈழத் தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால், அது இதுவரையில் நடைபெறவில்லை. நடைபெறுமென்று நம்புவதும் புத்திசாலித்தனமல்ல.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளினால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் எவையும் தமிழர்கள் எதிர்பார்க்கின்ற "தமிழ் இனப்படுகொலை" என்பதைப் பதிவு செய்ய மறுத்தே வந்துள்ளன. அத்துடன் மேலும் வழங்கப்படுகின்ற கால அவகாசம், இலங்கை அரசின் இந்தத் தீய முயற்சிக்கு உதவிடவே பயன்பட்டும் வருகின்றன.

அண்மையில், வொஷிங்டனில் நடைபெற்ற அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் வருடாந்த தலைமை இராஜதந்திரிகள் அமர்வில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கைச் சந்தித்த அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் சர்வதேச குற்றவியல் நீதிக்கான சிறப்புத் தூதுவர் பெத் வான் ஷாக் இலங்கையில் நீதி மற்றும் பொறுப்புக் கூறலுக்கான முக்கியமான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதை மையப்படுத்தி தொடர்ந்தும் பணியாற்றவிருப்பதாகக் கூறியிருக்கிறார். இது மேலும் மேலும் இலங்கைக்கு கால அவகாசம் கொடுத்து இலங்கை அரசின் பொறுப்புக்கூறலைத் தட்டிக் கழிக்கும் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பதாகவே அமைந்திருக்கிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் எவ்வித ஆக்கப்பூர்வமான விளைவையும் இதுவரையில் ஏற்படுத்தவில்லை. ஆனால், இலங்கை அரசால் புறக்கணிக்கப்பட்டு வரும் ஈழத்தமிழர்களுக்காக நீதி வழங்கலில் எந்தப் பயனையும் வழங்கிடப் போவதில்லை என்பதே உறுதியானது.

இந்த நிலையில்தான் பத்து வருடங்கள் பிரதமராக இருந்து மீண்டும் ஐந்து வருடங்களுக்கு இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவியிலிருக்கப்போகிறார் என்பது உறுதியாகியிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமை (09) பதவியுமேற்றிருக்கிறார். இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உட்பட பல உலகநாடுகளின் தலைவர்களும் இதில் பங்கேற்றிருக்கின்றனர். ஏற்கெனவே அவருக்கான வாழ்த்துக்களையும் பகிர்ந்திருக்கிறார்கள்.

இலங்கையானது இந்தியாவிற்குப் பல வழிகளிலும் விரோதமாக நடந்துகொண்டாலும் இலங்கைக்கு ஆதரவளிப்பதையும் உதவி வழங்குவதையும் இந்தியா தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த இடத்தில் இலங்கையின் நடத்தை இந்தியாவிற்குச் சிக்கல்களை உருவாக்கும் என்பதைப் புரிந்துகொள்ள டெல்லி ஏன் தலைப்படவில்லை என்ற கேள்வியைப் பலரும் பல வேளைகளிலும் கேட்டவண்ணமேயிருக்கிறார்கள்.

தமிழர்கள் பிரச்சினையில் 13ஆவது திருத்தம், மாகாண சபை முறையின் மாற்றம், தமிழர்களின் அரசியல் தீர்வு, ஜெனிவா மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்படுகின்ற தீர்மானங்கள், இலங்கைக்கும் இந்தியாவுக்குமான தரை வழிப்பாதை, விமானச் சேவை, கப்பல் சேவை எனப் பல விடயங்களில் இந்தியா அக்கறையுடையதாகவே இருக்கிறது.

ஆனால், ஒருங்கிணைந்த இலங்கைக்குள் தமிழ் சமுதாயத்தின் நீதி, சமத்துவம், அமைதி மற்றும் கௌரவத்திற்கு இந்திய அரசு துணை நிற்கும் என்பதுதான் இந்தியாவின் நிலைப்பாடாக இருக்கிறது.

காங்கேசன்துறையில் தாது மண் மற்றும் சீமெந்து தொழிற்சாலை திட்டம், கொழும்பு யாழ்ப்பாணம் ரயில் பாதை சீரமைத்தல், வவுனியாவில் பெரிய மருத்துவமனை, சம்பூர் மின் உற்பத்தி திட்டம், இந்திய-இலங்கை சுற்றுலாத் திட்டத்தை விரிவுபடுத்துதல், மின் சக்தி ஒப்பந்தம், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் தொழில் பயிற்சியும் இந்தியா வழங்குதல், கொழும்பு துறைமுகம் கிழக்கு முனையம் இந்திய இலங்கை கூட்டு நடவடிக்கை, இயற்கை எரிவாயுத் திட்டம், ஈழத்தமிழர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்தல், நகர்ப்புறத்தில் வீதிகளைச் சீர்படுத்தல், திருகோணமலை துறைமுகத் தளம் மற்றும் எண்ணெய் உற்பத்தி தொழில் ரீதியான ஒப்பந்தம், இலங்கை இராணுவத்திற்குப் பயிற்சியளித்தல் என இலங்கைக்கு இந்தியா தொடர்ச்சியாகச் செய்துவரும் நன்மைகள் ஏராளம்.

ஆனால், ஈழத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வை தமிழர்கள் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் பெற்றுக் கொடுப்பதில் இந்திய அரசு முழுமையான அக்கறையைக் காண்பிக்கவில்லை.

இலங்கைக்குப் பலவகைகளில் இந்தியா உதவிக்கரம் நீட்டியுள்ளது. இருந்தாலும், இந்தியாவிடம் நிதி உள்ளிட்ட பல்வேறு உதவிகளைப் பெற்றுக்கொண்டே அவற்றினைக் காண்பித்து சீனாவிடமும் உதவிகளைப் பெறுகிறது. இந்தியாவிடம் ஒப்புக்கு உறவு வைத்துக்கொண்டு தன்னுடைய முழுமையான ஆதரவைச் சீனாவிற்குக் கொடுப்பதாகவே இதனைப் பார்க்கலாம். அதே நேரத்தில், ஒரு வகையில் இந்தியாவை மிரட்டும் செயற்பாடாகவும் பார்க்க முடிகிறது.

ஈழத் தமிழ் விடுதலைப் போராட்ட அமைப்புகளை ஆரம்பத்திலிருந்து இந்தியாவே ஊக்குவித்தது, ஆதரவும் உதவியும் அளித்து வந்தது. இருந்தாலும், இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக இந்திய அமைதி காக்கும் படை வடக்கு, கிழக்கிற்கு வந்ததன் பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பின் செயற்பாடுகளால் அது சற்று மாற்றம் பெற்றது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் நிகழ்ந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை அதனை மேலும் சிக்கலாக்கியது.

இருந்தாலும் விடுதலைப் புலிகளின் மௌனிப்புக்குப் பின்னரேனும் இந்திய அரசியல் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படலாம் என்றே தமிழ் மக்களும் தமிழ் அரசியல்வாதிகளும் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். யுத்த மௌனிப்பு நிகழ்ந்து 15 வருடங்கள் கடந்தும் இதுவரையில் நடைபெறாத விடயத்தினை தொடர்ந்தும் நம்பிக்கொண்டிருப்பதனால் பயனிருக்குமா என்பது பொறுத்திருப்பே.

இந்த இடத்தில் தான் கடந்த இரண்டு தடவைகளில் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியிலிருந்த நரேந்திர மோடி, கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடனும் எதிர்க்கட்சிகளின் நெருக்குதல்களுக்கிடையிலும் தான் இந்த முறை பிரதமராகப் பதவிக்கு வந்திருக்கிறார். மேலும், அவருடைய பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்கே அவருக்கு நேரமிருக்காது என்றும் விமர்சனங்கள் வெளிவந்த வண்ணமிருக்கிறது.

இந்த நிலையில்தான், கைவிடப்பட்டதாக இருக்கின்ற மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்குரிய முன்னெடுப்புகள், 13ஆவது திருத்தத்தையேனும் முதலில் முழுமையாக அமுல்படுத்துவதற்குரிய அழுத்தம், வடக்கு கிழக்கில் போர் ஓய்ந்து 15 வருடங்கள் கடந்த நிலையிலும் நடைபெற்று வருகின்ற நில அபகரிப்புகளை நிறுத்துதல், அவற்றினை தமிழர்களின் அதிகாரத்துக்குக் கீழ் கொண்டுவருதல், போரின் போது காணாமல் போனவர்களைக் கண்டறிவதற்குரிய செயற்பாட்டைச் செய்தல். ஈழத்தில் தமிழ் விதவைகள் மறுவாழ்வு, வாழ்வாதார மேம்பாட்டுக்குரிய நடவடிக்கைகள், இந்தியாவிலுள்ள ஈழ அகதிகளுக்கான நலன்புரி தொடர்பில் திட்டவட்டமான தீர்மானங்கள், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஈழத் தமிழர்கள் இன அழிப்பு குறித்தான நியாயமான தீர்வு கிடைக்கதற்கான தீர்மானத்தினைக் கொண்டுவருதல் என ஒரு பெரும் பட்டியலே ஈழத் தமிழர் விடயத்தில் நிறைவேற்றுவதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் முன் இருக்கிறது.

தொல்பொருள் என்ற பெயரில் தமிழர்களுடைய பகுதிகளைப் பௌத்த மயமாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் இலங்கையின் அதிகார வர்க்கம் தமிழர்களின் விடயத்தில் எவ்வளவுக்கு நெருக்குதலைக் கொடுத்தாலும் கேட்பதற்கு யாருமில்லை என்ற நிலைப்பாட்டிலேயே இருந்து வருகிறது. இவ்வாறான நிலைப்பாட்டுக்கு முக்கிய முடக்கலை இந்தியா எடுத்தலே முதல் படியாக இருக்கும் இதனையேனும் இந்தியப் பிரதமர் தொடங்கி வைப்பாரா என்பதனைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

ஈழத் தமிழர்களை இந்தியா அரவணைத்தால்தான் இலங்கை இந்தியாவைக் கண்டு அச்சப்படலாம் என்று எண்ணுவதும் வீணாகுமா, அல்லது இலங்கை மீது முழுமையான, கடுமையான அழுத்தத்தைப் பிரயோகிக்குமா என்பது இன்னமும் ஐந்து வருடங்களுக்கும் கடந்து போகின்றதாக இருக்குமா என்பதும்கூட பொறுத்திருப்பே.

இருந்தாலும், இனியேனும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அஞ்சிய இந்திரா காந்தி அணுகுமுறை பிரயோகிக்கப்பட்டு இந்தியாமீது பயமில்லாமல் இருக்கும் இலங்கைக்கு அச்சத்தை ஊட்டட்டும் என்று நம்புவோம்.



# Star Garments குழுமம் இலங்கையில் ...

Star Garments குழுமம் (Star) தனது புதிய விரிவாக்க செயற்பாடான, கொலன்ன மெனுபக்ஷ்ரிங் லிமிடெட்டின் சொத்துகளை கையகப்படுத்தும் செயற்பாடுகளை பூர்த்தி செய்திருந்தது. குழுமத்தின் பன்னிரண்டாவது தொழிற்சாலையாக இது அமைந்திருப்பதுடன், இரத்தினபுரி மாவட்டத்தில் 1,000 க்கும் அதிகமான தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைந்திருக்கும். உலகின் இதர பாகங்களுக்கு, இலங்கையின் ஆடை ஏற்றுமதிகளுக்கு காணப்படும் வாய்ப்புகளை விரிவாக்கம் செய்வதற்கு காணப்படும் வாய்ப்புகளை பயன்படுத்தி, செயலாற்றுவதற்கான Starஇன் நம்பிக்கைக்கு மேலும் வலுச் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

இந்த கையகப்படுத்தல் தொடர்பில் Komarஇன் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சார்ளி குமார் கருத்துத் தெரிவிக்கையில், "ஆடைகள் உற்பத்தியில் முழுமையான வளங்களையும் வெளிப்படுத்தாத நாடாக இலங்கை அமைந்துள்ளது எனும் எமது நம்பிக்கையை வெளிப்படுத்துவதாகவும், இலங்கைக்கான எமது நீண்ட கால அர்ப்பணிப்பை மீள உறுதி செய்வதாக இந்த முதலீடு அமைந்துள்ளது. Komar ஐப் பொறுத்தமட்டில் Star தொடர்ந்தும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கும் என்பதுடன், எதிர்வரும் ஆண்டுகளில் இந்தப் பிரிவின் வளர்ச்சியை தொடர்ந்தும் நாம் எதிர்பார்த்துள்ளோம்." என்றார்.

நான்கு தசாப்த காலப்பகுதிக்கு மேலான அனுபவத்துடன், இலங்கையின் ஆடைகள் உற்பத்தித் துறையின் வளர்ச்சியில் Star முக்கிய பங்காற்றியுள்ளது. உலகத்தரம் வாய்ந்த ஆடைகள் கொள்முதல், வடிவமைப்பு மற்றும் உற்பத்தி நிறுவனம் தற்போது 9,000 க்கும் அதிகமான ஊழியர்களை தனது சகல தொழிற்சாலைகளிலும் கொண்டுள்ளதுடன், நாட்டில் காணப்படும் மிகவும் புத்தாக்கமான மற்றும் நிலைபேறான நிறுவனம் எனும் கீர்த்தி நாமத்தையும் கொண்டுள்ளது.

AIA New York's annual Design Awards 2020இல், நிறுவனத்தின் 70,000sq.ft புத்தாக்க நிலையத்துக்கு நிலைபேறாண்மை மெரிட் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. தென்கிழக்காசிய பிராந்தியத்தில் காணப்பட்ட முதலாவது Passive House design ஆக இது அமைந்துள்ளது. சகல தொழிற்சாலைகளிலும் CarbonNeutral சான்றளிப்புடன், Star இலங்கையில் காணப்படும் மாபெரும் காபன்-நடுநிலை நிறுவனம் எனும் பெருமையை கொண்டிருப்பதுடன், சகல உற்பத்தி தொழிற்சாலைகளுக்கும் சர்வதேச காபன்-நடுநிலை எனும் சான்றிதழைப் பெற்ற ஒரே நிறுவனமுமாகவும் அமைந்துள்ளது.

Star Garments குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.சுகுமாரன் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கைக்கு வெளியில் வளர்ச்சி மற்றும் விரிவாக்க செயற்பாடுகளுக்கான வாய்ப்புகளை நாம் இனங்காணும் நிலையில், இலங்கையினுள் காணப்படும் ஆடைத் தொழிற்துறையின் எதிர்காலம் மற்றும் அதன் வாய்ப்புகள் தொடர்பில் நாம் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டுள்ளோம். கொலன்ன மெனுபக்ஷ்ரிங் நிறுவனத்தை கையகப்படுத்தியுள்ளமை இந்த நம்பிக்கையை மேலும் உறுதி செய்வதாக அமைந்துள்ளது. நாடு எதிர்நோக்கியிருந்த பொருளாதார பின்னடைவுகளுக்கு மத்தியிலும், இலங்கையின் ஆடைத் தொழிற்துறையில் காணப்படும் வாய்ப்புகள் தொடர்பில் நாம் தொடர்ந்தும் எதிர்பார்ப்புகளை கொண்டுள்ளோம்" என்றார்.

இந்த முதலீடானது இலங்கையில் தனது உற்பத்தி இருப்பை உறுதி செய்வதற்கான Starஇன் மூலோபாயத்தில் முக்கிய அரணாக இந்த முதலீடு அமைந்திருப்பதுடன், இந்த மூலோபாய கையகப்படுத்தல் நிறுவனத்தின் இருப்பை மேலும் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

# CarePhant திட்டம் அறிமுகம்

Sun Siyam ரிசோர்ட்ஸ் குழுமத்தின் அங்கமான Sun Siyam பாசிகுடாவினால், CarePhant திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதனூடாக உடவளவை Elephant Transit Home (ETH)இல் காணப்படும் களு என பெயரிடப்பட்டுள்ள குட்டி யானையை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.



Sun Siyam பாசிகுடாவினால் ஆதரவளிக்கப்படும் CarePhant திட்டம், உயிரியல் பரம்பல் பாதுகாப்பு மற்றும் பொறுப்பு வாய்ந்த சுற்றுலா செயன்முறைகளை ஊக்குவிக்கும், இலங்கை வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துடன் இணைந்து முன்னெடுக்கப்படுகின்றது. Elephant Transit Home (ETH) உடன் கைகோர்த்துள்ளதனூடாக, Sun Siyam பாசிகுடாவினால் களு யானைக் குட்டிக்கு அவசியமான பராமரிப்பு வழங்கப்படுகின்றது. அனுராதபுரம் கலென்பிந்துனுவெவ காட்டுப் பிரதேசத்தில் கைவிடப்பட்ட கிணற்றில் தவறி விழுந்து, காப்பாற்றப்பட்ட இந்த யானைக் குட்டிக்கு தற்போது Elephant Transit Home (ETH) இல் அரவணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

சுமார் 8 மாதங்கள் வயதான இந்த யானைக் குட்டி, 2024 மார்ச் 23ஆம் திகதி Elephant Transit Home (ETH) க்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இங்கு வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் விலங்கு பேண் அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் நிபுணத்துவமான பராமரிப்பு வழங்கப்படுகின்றது.

2024 மே 8ஆம் திகதி களு யானைக்குட்டிக்கான பராமரிப்பை வழங்குவது தொடர்பான தீர்மானத்தை Sun Siyam பாசிகுடா மேற்கொண்டிருந்தது. வனாந்தரத்தில் மீண்டும் களு விடுவிக்கப்படும் வரையில் அவசியமான ஆதரவை வழங்கும். இதற்கமைய மாதாந்தம் சுமார் ரூ. 65,000 பங்களிப்பை (அண்ணளவாக 200 அமெரிக்க டொலர்கள்) வழங்க முன்வந்துள்ளது. Sun Siyam ரிசோர்ட்ஸ் குழுமவாரியாக முன்னெடுக்கப்படும் Sun Siyam பராமரிப்பு நிதியத்தினூடாக இந்த நிதித் தொகை பங்களிப்பு செய்யப்படும். CarePhant திட்டத்தின் அங்கமாக, Sun Siyam பாசிகுடாவினால் Elephant Transit Home இல் காட்சிப் பதாதை நிறுவப்பட்டு, அதில் களுவின் வாழ்க்கைப் பயணம் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், வனஜீவராசிகள் பாதுகாப்புக்கான ரிசோர்ட்டின் அர்ப்பணிப்பும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த காட்சிப் பதாதையினூடாக, விருந்தினர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு களு தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், இலங்கையின் பெறுமதி வாய்ந்த வனஜீவராசிகளை பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

Sun Siyam பாசிகுடாவின் பொது முகாமையாளர் அர்ஷெத் ரிபாய் கருத்துத் தெரிவிக்கையில், "CarePhant திட்டத்தை அறிமுகம் செய்துள்ளதையிட்டு நாம் பெருமை கொள்வதுடன், களுவின் நலனில் முக்கிய அங்கம் பெற்றுள்ளோம். வனஜீவராசிகள் பாதுகாப்புக்கான எமது அர்ப்பணிப்பை இந்தத் திட்டம் உறுதி செய்துள்ளதுடன், இலங்கையின் இயற்கை பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கான எமது அர்ப்பணிப்பையும் உறுதிப்படுத்தியுள்ளது" என்றார்.

Sun Siyam ரிசோர்ட்ஸ் நிலைபேறாண்மை செயற்திட்ட முகாமையாளர் உபுல் குமார குறிப்பிடுகையில், "எமது நிலைபேறான அபிவிருத்தி இலக்கம் 15 புவியில் உயிரினம் என்பதுடன் தொடர்புபட்டதாக CarePhant திட்டம் அமைந்துள்ளது. இதனூடாக, Sun Siyam பாசிகுடாவின் உயிரியல் பரம்பலை பாதுகாப்பது மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு முயற்சிகளுக்கு ஆதரவளிப்பது போன்றவற்றுக்கான அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினூடாக, எமது விருந்தினர்களுக்கும் பரந்தளவு சமூகத்தாருக்கும் வனஜீவராசிகள் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் இயற்கை பாரம்பரியத்தை பாதுகாப்பதில் எம்மில் ஒவ்வொருவரினாலும் ஆற்றக்கூடிய பங்களிப்பு ஆகியன தொடர்பில் விழிப்புணர்வூட்ட எதிர்பார்க்கின்றோம்" என்றார்.

CarePhant திட்டத்தில் Sun Siyam பாசிகுடாவின் பங்கேற்பு என்பது Sun Siyam Cares நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் பரந்தளவு நிலைபேறான முயற்சிகளை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தை குறைப்பது, சமூக அபிவிருத்திக்கு ஆதரவளிப்பது மற்றும் மாலைத்தீவுகள் மற்றும் இலங்கையில் காணப்படும் Sun Siyam ரிசோர்ட்ஸ் இனுள் உள்நாட்டு பாரம்பரியத்தை பேணுவது போன்றவற்றில் இந்த நிகழ்ச்சித் திட்டம் கவனம் செலுத்துகின்றது.




# திருநங்கைகளின் உரிமைகளுக்காக

உலக சிறந்த நண்பர்கள் தினத்தினை முன்னிட்டு, "திருநங்கைகளின் உரிமைகளை மீட்டெடுப்போம்" என்னும் கருப்பொருளில் நடை பயணம் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு அண்மையில், சனிக்கிழமை (08) நடைபெற்றது.

இந்த நடை பயணத்தில் பிரதம அதிதியாக கனடா உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ் கலந்துகொண்டார்.

■ பு.கஜிந்தன்



# காக்கை தீவில்

உலக பெருங்கடல் தினமான ஜூன் 8ஆம் திகதியன்று மட்டக்குளி காக்கை தீவு கடற்கரையைச் சுத்தப்படுத்தும் பணி கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் வழிகாட்டலில் இடம்பெற்றது









# மர நடுகை

உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி, ஹட்டன் பகுதியிலுள்ள தோட்ட நிறுவனத்துக்குச் சொந்தமான டிக்கோயா தேயிலைத் தோட்டத்தில் மரக்கன்று நடப்பட்டது.

■ காமினி பண்டார







# மரக்கன்று நடுகை

காத்தான்குடி-ஆற்றங்கரை மைதானத்தின் நீர் வழிந்தோடும் பகுதிகளில் மரக்கன்றுகளை நடும் நிகழ்வும் சுற்றாடல் தினக் கொண்டாட்டமும் காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ.உதயஸ்ரீதர் தலைமையில் வாவிக்கரை குபா மைதானத்தில் வெள்ளிக்கிழமை (07) இடம்பெற்றது.

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

# இலவச முகாம்

இந்தியாவின் ஜெய்பூரிலுள்ள பகவான் மகாவீர் விக்லாங் சஹாயட்ட சமித்தியினுடைய தொழில்நுட்ப உதவியுடன் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு இரண்டாவது தடவையாகச் செயற்கை அவயவம் பொருத்தும் இலவச முகாம் நடைபெறுகிறது. பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளியிலுள்ள யாழ். மாவட்ட திறன் விருத்தி நிலையத்தில் ஜூன் 4ஆம் திகதி ஆரம்பமான முகாம் 20ஆம் திகதி வரை நடைபெறும்.

■ எஸ்.தில்லைநாதன்








# விழிப்புணர்வு வீதி நாடகம்

பெண்கள் உரிமை தொடர்பாகவும் திருநங்கைகளுக்கும் சமூகத்தில் சம உரிமை வழங்க வேண்டுமெனவும், விழிப்புணர்வூட்டும் வீதி நாடகம் நுவரெலியா பிரதான தபால் நிலையத்திற்கு முன்பாக சனிக்கிழமை (08) இடம்பெற்றது.

■ செ.திவாகரன்

கொழும்புக் கம்பன் கழகம் நடத்தும்

# கம்பன் விழா–2024

14, 15, 16, 17ஆம் திகதிகளில் நடைபெறும்







கொழும்புக் கம்பன் கழகத்தின் இவ்வாண்டுக் கம்பன் விழா கொழும்பு-வெள்ளவத்தை ஸ்ரீஇராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் இம் மாதம் 14, 15, 16, 17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இலங்கையில் கம்பன் கழகத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டுடன் 44 வருடங்கள் பூர்த்தியாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டுக் கம்பன் விழாவின் முதல் நாளான ஜூன் மாதம் 14ஆம் திகதி இராமகிருஷ்ண தோட்டம், இல. 11இல் அமைந்துள்ள ஸ்ரீ ஐஸ்வர்ய லஷ்மி கோயிலிலிருந்து கம்பன் திருவுருவப் படமும், சீதா இராம விக்கிரகங்களும் இலங்கையின் பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்களின் மங்கல இசையுடனும், கல்லூரி மாணவர்களின் கீழைத்தேய, மேலைத்தேய வாத்திய இசையுடனும், மங்கையர்களின் நிறைகுட பவனியுடனும், ஊர்வலமாக விழா மண்டபம் நோக்கி மாலை 5 மணிக்கு எடுத்து வரப்படவுள்ளன.

ஊர்வலத்தைத் தொடர்ந்து அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் அபிராமி கயிலாசபிள்ளை மாலை 5.30க்கு மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்க, மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதியரசரும் கொழும்புக் கம்பன் கழகப் பெருந்தலைவருமான ஜெ.விஸ்வநாதன் தலைமையுரையையும் கொழும்புக் கம்பன் கழகத் தலைவர் ஈ.கணேஷ் தொடக்க உரையையும் ஆற்றவுள்ளனர்.

## நூல் வெளியீடு:

இவ்வாண்டுக் கம்பன் விழா திருநாள் மங்கலத்தன்று கம்பராமாயண செய்யுட்களின் முழுத் தொகுப்பு நூல் (பைபிள் தாளில் அச்சிடப்பட்டது) இரு பாகங்களாக வெளியிடப்படவுள்ளது. இந்நூலின் முதற் பிரதிகளை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

## கம்பன் புகழ் விருது:

அகில இலங்கைக் கம்பன் கழகம் உலகளாவித் தமிழ்ப்பணி செய்த சான்றோர் ஒருவருக்கு 'கம்பன் புகழ் விருதினை' ஆண்டுதோறும் கொழும்புக் கம்பன் விழாவில் வழங்கி வருகிறது. இவ்வாண்டு, புகழ்பெற்ற எழுத்தாளர் சிவசங்கரிக்கு வழங்கப்படவுள்ளது. விருதுக் கேடயம், பொன்னாடை, பொற்கிழி ஆகியவற்றுடன் கூடிய ரூபாய் ஐந்து இலட்சம் பெறுமதியானதாக இவ்விருது அமையவுள்ளது. இவ்விருதினை, கம்பன் விழாவின் நிறைவு நாளன்று மாலை கழகப்பெருந் தலைவர் நீதியரசர் ஜெ.விஸ்வநாதன் எழுத்தாளர், சிவசங்கரி அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

## சான்றோர் கௌரவம் பெறும்:

தம் செயற்பாடுகளால் நம் நாட்டுக்குப் பெருமை சேர்த்த பெருமக்கள் அறுவரை ஆண்டுதோறும் அகில இலங்கைக் கம்பன் கழகம் கௌரவித்து வருகிறது. அவ்வரிசையில் இவ்வாண்டு கௌரவத்துக்குரியவர்களாக, இலங்கையின் முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய ரவூப் ஹக்கீம், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில்

> ‘கம்பன் புகழ் விருதினை’ ஆண்டுதோறும் கொழும்புக் கம்பன் விழாவில் வழங்கி வருகிறது. இவ்வாண்டு, புகழ்பெற்ற எழுத்தாளர் சிவசங்கரிக்கு வழங்கப்படவுள்ளது

தொண்டமான், என்பு அறுவை சிகிச்சை நிபுணர் டொக்டர் சண்முகம் ஸ்ரீதரன், தமிழ் அறிஞர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், வடமாகாண பிரதம செயலாளர் லட்சுமணன் இளங்கோவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தத்தம் துறைசார்ந்து இப்பெரியோர்கள் நம் தேசத்திற்கும், இனத்திற்கும் தன்னலமற்று செய்த பெருந்தொண்டுக்காகவும் அவர்தம் துறைசார்ந்த ஆற்றலுக்காகவும் வழங்கப்படும் இவ்விருதுகள் ஈழத் தமிழ் மக்களால் பெரிதும் போற்றப்படுகின்றன. இவ்விருதுக்கு உரியவர்களுக்கான கௌரவங்கள், விழாவின் இறுதி நாளில் சகல மரியாதைகளுடனும் வழங்கப்படவுள்ளன.

## அறக்கட்டளை விருதுகள்:

கம்பன் விழாவில் வருடாந்தம் வழங்கவென அறக்கட்டளை விருதுகளைச் சிலர் ஏற்படுத்தியுள்ளனர். நாவலர் நற்பணி மன்றத்தின் தலைவர் அமரர் என்.கருணை ஆனந்தன் சிறந்த அறிஞர் ஒருவருக்கு வழங்கவென நிறுவியுள்ள 'நாவலர் விருது' இவ்வாண்டு அரிய பல நூல்களை வெளியிட்டுவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற 'சிவாலயம்' ஜெ.மோகனுக்கு (பொறியியலாளர்) வழங்கப்படுகிறது. தமிழ்நாடு திருக்குவளை இராமஸ்ரீனிவாசன் மங்கையர்க்கரசி நினைவு அறக்கட்டளையினர், சிறந்த இசைக்கலைஞர் ஒருவருக்கு வழங்கவென நிறுவியுள்ள 'விபுலாநந்தர் விருது' இவ்வாண்டு புகழ்பெற்ற சங்கீத பூஷணம் பொன். ஸ்ரீவாமதேவனுக்கு வழங்கப்படுகிறது. கவிஞர் அமரர் 'கவிக்கோ' அப்துல் ரகுமான், ஈழத்துக் கவிஞர்களைக் கௌரவிப்பதற்காக நிறுவிய 'மகரந்தச் சிறகு' விருது இவ்வாண்டு இலங்கையின் சிறந்த படைப்பாளிகளில் ஒருவரான கவிஞர் மேமன்கவிக்கு வழங்கப்படுகிறது. புகழ்பெற்ற தமிழ்ப் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தனின் நினைவாக அவரின் குடும்பத்தினர் நிறுவியுள்ள அறக்கட்டளை மூலம், சிறந்த ஆய்வு நூல் ஒன்றுக்கு 'நுழைபுலம் ஆய்வு' விருது வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் இவ்வாண்டுக்குரிய சிறந்த ஆய்வு நூலாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா எழுதிய "யாழ்ப்பாணத்துக் கல்வி வளர்ச்சியில் இந்திய அறிஞர்களின் பங்களிப்பு" எனும் நூல் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகப் பேராசிரியர் சாலமன் பாப்பையா நிறுவியுள்ள 'ஏற்றமிகு இளைஞர்' விருது, அண்மையில் புகழடைந்துவரும் தமிழ் கிரிக்கெட் விளையாட்டு வீரர் வி. வியாஸ்காந்துக்கு வழங்கப்படுகிறது.

## சமூக நிதியுதவி:

அமரர் எல்.அலமேலு ஆச்சி ஞாபகமாகத் தமிழ்நாடு ஏ.எல்.சிதம்பரம் நிறுவிய அறக்கட்டளை நிதி, இவ்வாண்டு மட்டக்களப்பு யோகர் சுவாமி மகளிர் இல்லத்திற்கு வழங்கப் பெறுகிறது. மேலும், அமரர் சி.கே.இலங்கராஜா ஞாபகார்த்த நிதி, அமரர் வித்துவான் க.ந.வேலன் ஞாபகார்த்த நிதி, அமரர் டாக்டர் செ.சபாநடேசன் ஞாபகார்த்த நிதி, முன்னாள் அதிபர் அமரர் ஈ. சபாலிங்கம் ஞாபகார்த்த நிதி, சூரியகண்ணம்மாள் அறக்கட்டளை நிதி உதவிகள் இலங்கையில் பல பாகங்களிலும் அமைந்திருக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் சிலருக்கு அவர்களது உயர் கல்வியைத் தொடரும் பொருட்டு வழங்கப்படவுள்ளன.

இளையோர் ஊக்குவிப்பு இயல்த் துறையில் ஈடுபடும் மாணவர்களை ஊக்குவிப்பதற்காக ஆண்டு தோறும் கம்பன் கழகம் நடத்தி வரும் அமரர் துரை. விஸ்வநாதன் நினைவுப் பேச்சுப் போட்டி, அமரர் பொன். பாலசுந்தரம் நினைவுக் கவிதைப் போட்டி, நாவலர் நற்பணிமன்ற அனுசரணையில் நடத்தப்படும் திருக்குறள் மனனப்போட்டி, இலக்கியப் புரவலர் ஹாசிம் உமரின் அனுசரணையில் நடாத்தப்படும் இஸ்லாமிய இலக்கியப் பேச்சுப் போட்டி முதலியவற்றில் வெற்றி பெற்ற போட்டியாளருக்கான பதக்கங்களும் பரிசில்களும் வழங்கும் நிகழ்ச்சி விழாவின் மூன்றாம் நாள் மாலை நிகழ்வில் நடைபெறவுள்ளது.

## கம்பன் விழா நிகழ்ச்சிகள்:

இவ்வாண்டுக் கம்பன் விழாவில் தனியுரை, விவாத அரங்கம், பட்டிமண்டபம், சிந்தனை அரங்கு, கவியரங்கம், கருத்தரங்கம், நாடக அரங்கம், வழக்காடு மன்றம், நாட்டிய அரங்கு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

## சிறப்பு நாட்டிய அரங்கம்:

இவ்வாண்டுக் கம்பன் விழாவின் முதல் நாள் மாலை அரங்கில் சிறப்பான நாட்டிய நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. "இராமன் எத்தனை இராமனடி?" எனும் பொருளில் இடம்பெறவுள்ள இந்நிகழ்ச்சியை நம் நாட்டின் புகழ்பெற்ற நடன ஆசிரியர்கள் நால்வரின் மாணவர்கள் சேர்ந்து வழங்கவுள்ளனர். கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன், கலைமாமணி ஸ்ரீமதி சிவானந்தி ஹரிதாசன், நாட்டிய பூரண கலாநிதி ஸ்ரீமதி நிர்மலா ஜோன், நாட்டிய கலைமணி ஸ்ரீமதி பவானி குகப்பிரியா, ஆகியோரின் மாணவியர்கள் இணைந்து இந்நிகழ்ச்சியை வழங்கவுள்ளனர்.

## விழாவில் கலந்துகொள்ளும் பிரமுகர்கள், அறிஞர்கள்:

இவ்விழாவில் மலேசிய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை முன்னாள் பிரதியமைச்சரும் மலேசியக் கண்ணதாசன் அறவாரியத்தின் செயலருமான டத்தோ ஸ்ரீ எம்.சரவணன் தலைமையில் மலேசிய இலக்கியப் பிரமுகர் குழுவினர் கலந்து சிறப்பிக்கின்றனர். அவ்வாறே புதுச்சேரி சட்டசபையின் முன்னாள் சபாநாயகர் வி.பி.சிவக்கொழுந்து தலைமையில் புதுவைப் பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கின்றனர். மேலும் கோவிலூர் ஆதீன கர்த்தர் சீர்வளர்சீர் நாராயண ஞானதேசிக சுவாமிகள், 'கற்க' அறக்கட்டளையின் தலைவர் எஸ்.செந்தில்குமார், டில்லி கம்பன் கழகத் தலைவர் பெருமாள், அவுஸ்திரேலியாவில் வதியும் வைத்தியநிபுணர் செ.சிதம்பரக்குமார், சிங்கப்பூரைச் சார்ந்த முன்னாள் வங்கி அதிகாரி மகாலிங்கம் முதலிய பிறநாட்டுப் பிரமுகர்கள்
பலரும் விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்றனர். இவ்வாண்டு விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உரையாற்றவென தமிழ்நாட்டின் தலைசிறந்த அறிஞர்கள் மற்றும் பேச்சாளர்கள் பலரும் வருகை தருகின்றனர். 'இலக்கியச் சுடர்' த.இராமலிங்கம் முனைவர் பாரதி கிருஷ்ணகுமார், கவிச்சுடர் கவிதைப்பித்தன், முனைவர் இரா மாது, பாரதி பாஸ்கர், வழக்கறிஞர் கே.சுமதி, பேராசிரியை பர்வீன் சுல்தானா ஆகியோர் வருகை தருகிறார்கள். இவர்களோடு சென்னைக் கம்பன் கழகம், புதுவைக் கம்பன் கழகம், கோவில்ப்பட்டிக் கம்பன் கழகம், டில்லி கம்பன் கழகம், திருச்சிக் கம்பன் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இவர்களோடு நம் நாட்டைச் சேர்ந்த பெரியோர்கள் பலரும் இவ்வாண்டு கம்பன் விழாவில் கலந்து கொள்கின்றனர்.

## புத்தகக் கண்காட்சி:

விழா நடைபெறும் நான்கு நாட்களிலும் மண்டபவாயிலில் பூபாலசிங்கம் புத்தகசாலை, புத்தகக் கண்காட்சி ஒன்றினை நடத்தவுள்ளது. இக் கண்காட்சியில் சிறப்புத் தள்ளுபடியில் புத்தகங்கள் விற்பனை செய்யப்படும்.

புதுடெல்லி

3ஆவது முறையாக நரேந்திர மோடி

# அரியணையில் அமர்ந்தார்

மூன்றாவது முறையாக, இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி பதவியில் அமர்ந்துள்ளார். அவருக்கு, உலகத் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

பிரமர் மோடி பதவியேற்கும் விழா ஞாயிற்றுக்கிழமை (09) புதுடெல்லியில் இடம்பெற்றது. இதனை முன்னிட்டு புதுடெல்லி களைகட்டிய நிலையில், இலங்கை, மொரிஷியஸ், மாலைத்தீவு போன்ற நாடுகளின் ஜனாதிபதிமார், பிரதமர்கள் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களும் புதுடெல்லிக்கு வருகை தந்திருந்தனர்.



மேலும், பதவியேற்பு விழா, ஞாயிற்றுக்கிழமை (09) மாலை 7.15 மணிக்கு ஆரம்பமான நிலையில், இவ்விழாவில், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மாலைத்தீவு ஜனாதிபதி முகமது முயிசு, சீஷெல்ஸ் துணை ஜனாதிபதி அஹமது அபிப், பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, மொரிஷியஸ் பிரதமர் பிரவின் குமார் ஜெகநாத், நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹால் பிரசந்தா, பூட்டான் பிரதமர் ஷெரீங் டோப்கே உட்பட பல முக்கியஸ்தர்களும் பங்கேற்றனர்.

ஒடிசா

ஒடிசா வரலாற்றில் முதன்முறையாக

## இஸ்லாமியப் பெண் எம்.எல்.ஏ.

ஒடிசா வரலாற்றில் முதன்முறையாக இஸ்லாமியப் பெண் ஒருவர் எம்.எல்.ஏவாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஒடிசாவில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், நவீன் பட்நாயக்கின் 24 ஆண்டுகால ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. இங்கு பாஜக முதன்முறையாக ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. இத்தேர்தலில், பாராபதி தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் சோஃபியா பிர்தவுஸ் வென்றுள்ளார். இதன்மூலம் ஒடிசா சட்டமன்றத்திற்குத் தேர்வான முதல் இஸ்லாமியப் பெண் என்ற பெருமையையும் சோஃபியா ஃபிர்தௌஸ் பெற்றுள்ளார்.

இவர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாஜக வேட்பாளர் பூர்ண சந்திர மகாபத்ராவைவிட சுமார் 8ஆயிரம் வாக்குகள் அதிகமாகப் பெற்று வெற்றிவாகை சூடி உள்ளார்.

சோஃபியா பிர்தவுஸின் தந்தை, ஒடிசா காங்கிரஸின் மூத்த தலைவரான முகமது மொகிம் ஆவார். இவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த தொகுதியில் அவரது மகள் தற்போது வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



மும்பை

ஒரே ஓடுபாதையில் இரண்டு விமானங்களால்

## விமான நிலையத்தில் பரபரப்பு



மும்பையில், எயார் இந்தியா விமானம் கிளம்பிய ஓடுபாதையில், இண்டிகோ விமானம் தரையிறங்கிய நிலையில், இது குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மும்பை விமான நிலையத்தில் எயார் இந்தியா விமானம் புறப்பட்டு மேலே பறக்க தொடங்கியது. அதே ஓடுபாதையில், அந்த விமானத்தின் பின்பகுதியில் இருந்து மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் இருந்து வந்த இண்டிகோ விமானம் தரையிறங்கியது.

இந்நிலையில், இரண்டு விமானங்களுக்கும் இடையிலான இடைவெளி குறைவாக இருந்ததால், அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

அதைத்தொடர்ந்து, எயார் இந்தியா விமானம் கிளம்பிச் சென்றதுடன், இதில் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை. இது குறித்த காணொளி சமூக வலைத்தளங்களில் வெளியாகி உள்ள நிலையில், இந்த நிகழ்வு குறித்து விசாரணை நடத்த டிஜிசிஏ உத்தரவிட்டுள்ளது.

டென்மார்க்

தாக்குதல் தொடர்பில்

## மனம் திறந்த டென்மார்க் பிரதமர்



டென்மார்க் பிரதமர் மேட் ஃப்ரெடெரிக்சன் (Mette Frederiksen) கோபென்ஹாகென் சென்றிருந்த போது, மர்ம நபரால் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

இவ்வாறு பிரதமரைத் தாக்கிய 39 வயதான சந்தேக நபர் கைது செய்யப்பட்ட நிலையில், ஜூன் 20ஆம் திகதி வரை நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

தாக்கப்பட்ட பிரதமர் மேட் ஃப்ரெடெரிக்சன் உடனடியாக மருத்துவமனை அழைத்துச் செல்லப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில், பிரதமரின் கழுத்து பகுதியில் இலேசான காயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இத் தாக்குதல் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள பிரதமர் மேட் ஃப்ரெடெரிக்சன், “அன்று நடந்த சம்பவத்தால் அதிர்ச்சியும், கவலையும் அடைந்தேன். இருப்பினும், தற்போது நலமாகவே இருக்கிறேன். எனக்காகக் குரல் கொடுத்தவர்கள், ஊக்கமளித்தவர்களுக்கு நன்றி” என தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த சமயத்தில் தனது குடும்பத்தாருடன் இருக்க விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாசா

விண்வெளிக்கு மீன் குழம்பு எடுத்துச் சென்ற

## சுனிதா வில்லியம்ஸ்




சர்வதேச விண்வெளி நிலையத்திற்குச் சென்றுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ், தன்னுடன் மீன் குழம்பை எடுத்துச் சென்றுள்ளதாக நாசா தெரிவித்திருக்கிறது.

சுனிதா வில்லியம்ஸ், 3ஆவது முறையாக விண்வெளிக்குச் சென்றுள்ளார். ஸ்டார்லைனர் விண்வெளி ஓடத்தில், நாசாவை சேர்ந்த விண்வெளி வீரர் புட்ச் வில்மோருடன் சர்வதேச விண்வெளி நிலையத்தைக் கடந்த 6ஆம் திகிதி அவர் அடைந்துள்ளார்.

இந்நிலையில், சுனிதா வில்லியம்ஸ் விண்வெளி நிலையத்திற்குள் சென்றபின், அங்கு மிதந்தபடி நடனமாடிய காணொளி வெளியாகி ஆச்சரியத்தைக் கொடுத்தது

இதனிடையே நாசா, இந்தியாவைச் சேர்ந்த தனியார் ஊடகத்திடம் தெரிவித்திருக்கையில், “சுனிதா வில்லியம்ஸ் விண்வெளிக்கு மீன் குழம்பு எடுத்துச் சென்றுள்ளார். இது வீட்டில் இருப்பதைப் போன்ற உணர்வை அவருக்குத் தரும். அதேநேரம் இந்த முறை அவர், தனக்கு விருப்பமான சமோசாவை எடுத்துச் செல்லவில்லை” என தெரிவித்திருக்கிறது.

பயணத்திற்கு முன்பு தனியார் ஊடகத்திற்குப் பேட்டியளித்த சுனிதா வில்லியம்ஸ், “விண்வெளிக்கு விநாயகர் சிலையைக் கொண்டு செல்லவுள்ளேன். அது எனக்கு அதிர்ஷ்டத்தை வழங்கும் என நம்புகிறேன்” என தெரிவித்திருந்தார்.

இதற்கு முன்பு அவர் தனது விண்வெளிப் பயணத்தின்போது, பகவத்கீதை, உபநிடதங்கள் மற்றும் சமோசாக்களை கொண்டு சென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்தை வென்ற அவுஸ்திரேலியா




சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரில், பார்படோஸில் சனிக்கிழமை (08) நடைபெற்ற நடப்புச் சம்பியன்கள் இங்கிலாந்துடனான குழு பி போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்தின் அணித்தலைவர் ஜொஸ் பட்லர், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, டேவிட் வோர்னரின் 39 (16), அணித்தலைவர் மிற்செல் மார்ஷின் 35 (25), ட்ரெவிஸ் ஹெட்டின் 34 (18), மார்க்கஸ் ஸ்டொய்னிஸின் 30 (17), கிளென் மக்ஸ்வெல்லின் 28 (25), மத்தியூ வேட்டின் 17 (10) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஜொஃப்ரா ஆர்ச்சர் 4-0-28-1, லியம் லிவிங்ஸ்டோன் 2-0-15-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 202 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, பட்லரின் 42 (28), பில் ஸோல்ட்டின் 37 (23) ஓட்டங்களோடு வேகமான ஆரம்பத்தைப் பெற்றபோதும் இருவரையும் அடம் ஸாம்பாவிடம் இழந்ததோடு, அடுத்து வந்த வில் ஜக்ஸையும் மார்க்கஸ் ஸ்டொய்னிஸிடம் இழந்தது.

ஜொனி பெயார்ஸ்டோ, 25 (15) ஓட்டங்களைப் பெற்ற மொயின் அலியை அடுத்தடுத்த ஓவர்களில் ஜொஷ் ஹேசில்வூட், பற் கமின்ஸிடம் இழந்தது. பின்னர் அடுத்து வந்த லிவிங்ஸ்டோனையும் கமின்ஸிடம் இழந்த இங்கிலாந்து 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 165 ஓட்டங்களையே பெற்று 36 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஸாம்பா தெரிவானார்.

இதேவேளை, ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெற்ற நெதர்லாந்துடனான குழு டி போட்டியில் தென்னாபிரிக்கா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

நெதர்லாந்து: 103/9 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: சீபிராண்ட் எங்கெல்பேர்ச்ட் 40 (45), லோகன் வான் பீக் 23 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஒட்னெய்ல் பார்ட்மன் 4/11 [4], அன்றிச் நொர்கியா 2/19 [4], மார்கோ ஜன்சன் 2/20 [4], கேஷவ் மஹராஜ் 0/24 [4], ககிஸோ றபாடா 0/27 [4])

தென்னாபிரிக்கா: 106/6 (18.5 ஓவ.) (துடுப்பாட்டம்: டேவிட் மில்லர் ஆ.இ 59 (51), ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ் 33 (37) ஓட்டங்கள். பந்துவீச்சு: விவியன் கிங்மா 2/12 [4], லோகன் வான் பீக் 2/21 [4], போல் வான் மீக்கரன் 0/13 [4], டிம் பிறிங்கிள் 0/14 [2])

போட்டியின் நாயகன்: டேவிட் மில்லர்

இந்நிலையில், கயானாவில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்ற உகண்டாவுடனான குழு சி போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது.

இதேவேளை, நியூயோர்க்கில் இன்று திங்கட்கிழமை(10) 8 மணிக்கு நடைபெறவுள்ள குழு டி போட்டியில் பங்களாதேஷும் தென்னாபிரிக்காவும் மோதவுள்ளன.

## போர்த்துக்கல்லை வென்ற குரோஷியா



போர்த்துக்கல்லில் சனிக்கிழமை(08) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில், 2-1 என்ற கோல் கணக்கில் குரோஷியா வென்றது.

குரோஷியா சார்பாக லூகா மோட்ரிச், அன்டே புடிமிர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, போர்த்துக்கல் சார்பாகப் பெறப்பட்ட கோலை டியகோ ஜோட்டா பெற்றார்.

ஐக்கிய அமெரிக்காவில் ஞாயிற்றுக்கிழமை(09) நடைபெற்ற மெக்ஸிக்கோவுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் பிரேஸில் வென்றது.


பிரேஸில் சார்பாக அன்ட்ரியாஸ் பெரைரா, கப்ரியல் மார்ட்டினெல்லி, என்ட்ரிக் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். மெக்ஸிக்கோ சார்பாக ஜூலியன் குய்னொனெஸ், குய்லெர்மோ மார்டினெஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

## நாப்போலி செல்லும் லுக்காக்கு?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் முன்களவீரரான றொமெலு லுக்காக்குவை கைச்சாத்திடுவதில் இத்தாலிய சீரி ஏ கழகமான நாப்போலி ஆர்வம் காட்டுகையில், அவரைக் கைச்சாத்திடுவதற்குரிய தொகையான 38 மில்லியன் ஸ்டேர்லிங்க் பவுண்ஸ்களை செல்சி கோருவதாகக் கூறப்படுகிறது.

கடனடிப்படையில் 31 வயதான லுக்காக்குவை அனுப்பத் தயாரில்லை செல்சி குறிப்பிடுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.



பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் தொடர்:

## சம்பியனான ஸ்வியாடெக்

பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் தொடரில் உலகின் முதல்நிலை வீராங்கனையான இகா ஸ்வியாடெக் சம்பியனானார்.

சனிக்கிழமை (08) நடைபெற்ற தனது இறுதிப் போட்டியில் இத்தாலியின் ஜஸ்மின் பலினினியை எதிர்கொண்ட போலந்தின் ஸ்வியாடெக், 6-2, 6-1 என்ற நேர் செட்களில் வென்றே சம்பியனானார்.

தனது அரையிறுதிப் போட்டியில் மூன்றாம் நிலை வீராங்கனையான கொக்கோ கௌஃப்பை எதிர்கொண்ட ஸ்வியாடெக் 6-2, 6-4 என்ற நேர் செட்களில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றதுடன், ரஷ்யாவின் மிர்ரா அன்ட்ரீவாவை 6-3, 6-1 என்ற நேர் செட்களில் வென்று இறுதிப் போட்டிக்கு பலினினி தகுதி பெற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 10, ஜூன் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு -02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.